தேர்தல் பாடல் இயற்றியவர்: நா.ரவி ரங்கசுவாமி +91 99426 84099

ASTROLOGY TEMPLE

astrologytemple.com

வோட்டுபோடு வோட்டுபோடு உன்
உரிமையை நிலைநாட்ட வோட்டுபோடு
வோட்டுபோடு வோட்டுபோடு உன்
கடமையை நிறைவேற்ற வோட்டுபோடு
வாக்களிப்போம் வாக்களிப்போம்
மக்களாட்சி மலர்ந்திட வாக்களிப்போம்
வாக்களிப்போம் வாக்களிப்போம்
மக்களே மக்களை ஆள வாக்களிப்போம் ( வோட்டு )

உலகின் மிகப்பெரிய மக்களாட்சி நாடு - இதை
உணர்ந்து தவறாமல் நீ வோட்டுபோடு
உனது பிரதிநிதியை தேர்ந்தெடுக்க வோட்டுபோடு
நமது ஜனநாயகம் செழித்திடவே வோட்டுபோடு
தேர்தல் மூலமாக தேர்ந்தெடுக்க வோட்டுபோடு
வாக்குச்சாவடி தேடிவந்து வோட்டுபோடு
நீ வாழ்வதை உறுதிசெய்ய வோட்டுபோடு
நீ ஆள்வதை நீயே காண வோட்டுபோடு ( வோட்டு )

ரகசிய வாக்களிக்கும் மக்களாட்சி நாடு - நீ
ரகசிய மாகவே உன் வோட்டைப்போடு
தேர்தல் விதிமுறை தெரிந்துகொண்டு வோட்டுபோடு
வாக்களிக்கும் முறை தெரிந்து வோட்டுபோடு
வாக்குரிமையை பயன்படுத்தி வோட்டுபோடு
உன் சார்பாய் அரசை வழிநடத்த வோட்டுபோடு
நீ வாழ்வதை பதிவுசெய்து வோட்டுபோடு
நீயே உனை ஆள்வதற்கு வோட்டுபோடு ( வோட்டு )

தேர்தல் பாடல் இயற்றியவர்: நா.ரவி ரங்கசுவாமி +91 99426 84099